பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 07 2025 **SATURDAY** 6 45 **AM**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவில் ஜனநாயகம் என்பது மக்களின் வாழ்வியல் முறையாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவில் தயாரிக்கப்படும் பொம்மைகள் சர்வதேச தரத்திற்கு இணையாக இருக்க வேண்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கடந்த ஆண்டில் 17 ஆயிரத்து 702 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கூறியுள்ளது.

4. கல்லணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும் என்பதால், காவிரி கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. குரேஷியாவில் நடைபெற்ற ரேபிட் செஸ் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் குகேஷ் வென்றுள்ளார்.

>>>>>>>>>><<<<<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐந்து நாடுகள் சுற்றுப் பயணத்தின் மூன்றாவது கட்டமாக **Trinidad Tobago** பயணத்தை முடித்துக் கொண்டு, அர்ஜென்டினா சென்றடைந்துள்ளார்.

அந்நாட்டின் தலைநகர் **Buenas Aires -**ல் இன்று அர்ஜென்டினா அதிபர் திரு. **Javier Milei** -யை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

முன்னதாக, போர்ட் ஆப் ஸ்பெயினில் உள்ள **Trinidad Tobago** நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழத்திய பிரதமர், இந்தியாவில் ஜனநாயகம் என்பது வெறும் அரசியல் அமைப்பு அல்ல, மக்களின் வாழ்வியல் முறையாக உள்ளது என்று கூறினார்.

இந்தியாவுக்கும், டிரினிடாட் டொபோகோவுக்கும் இடையேயான உறவுகள் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்தது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை எதிர்த்து வலுவுடன் போராட முன்வருமாறு சர்வதேச சமுதாயத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, **Trinidad Tobago** பிரதமர் திரு. **Kamla Persad** -டுடன் விரிவான பேச்சுக்கள் நடத்திய பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொருளாதார உறவுகளையும், பேரிடர் மேலாண்மை, பருவநிலை மாற்றம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், சுகாதாரம், வேளாண் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த பேச்சுக்களின் இறுதியில், கட்டமைப்பு மற்றும் மருந்து உற்பத்தி ஆகிய துறைகளில் ஒத்துழைத்து செயல்பட வகை செய்யும் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

15 கரீபியன் நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட **Caricom** அமைப்பின் செயல்பாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

**>>>>>>>>>><<<<<<<<<<**

இந்தியாவிலிருந்து 153 நாடுகளுக்கு பொம்மைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று சர்வதேச பொம்மை வர்த்தக கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், உள்ளூரில் தயாரிக்கப்படும் பொம்மைகள் ஏற்றுமதிக்கு ஏற்ப சர்வதேச தரத்தில் இருப்பதை உறுதிப்படுத்துமாறு ஏற்றுமதியாளர்களை கேட்டுக் கொண்டார்.

தரமான பொம்மைகளை தயாரிப்பதற்கு மத்திய அரசு உற்பத்தியாளர்களுக்கு தேவையான அனைத்துவிதமான உதவிகளையும் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு பொம்மைகள் ஏற்றுமதி செய்யப்பட்டாலும், உள்நாட்டிலேயே மிகப் பெரிய சந்தை உள்ளது என்றும், அது தொடர்ந்து விரிவடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

உள்ளூர் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பிரதமரின் முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், உற்பத்தியாளர்களுக்கு தேவையான கடனுதவிகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>>>>>><<<<<<<<<<**

கடந்த ஆண்டில் 17 ஆயிரத்து 702 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கூறியுள்ளது.

இதுகுறித்து தேர்வாணையத்தின் செயலாளர் திரு. கோபால சுந்தரராஜ் விடுத்துள்ள அறிக்கையில், அரசு பணியை எதிர்நோக்கியிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக 17 ஆயிரத்து 595 காலிப் பணியிடங்கள் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் சட்டப்பேரவையில் அரசு அறிவித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நடப்பாண்டு ஜூன் மாதம் வரை பல்வேறு அரசு துறைகள் மற்றும் பொதத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப, 17 ஆயிரத்து 702 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கூடுதலாக 2 ஆயிரத்து 500-க்கும் கூடுதலான காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

மதுரையில் மருத்துவக் கல்லூரியுடன் கூடிய எய்ம்ஸ் மருத்துவமனை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செயல்பட தொடங்கும் என்று மருத்துவமனை நிர்வாக அதிகாரி திரு. அனுமந்த ராவ் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் தொடர்பாக, மக்களவை உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும், ஆயிரத்து 700-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரவு-பகலாக பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போது ராமநாதபுரத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வரும் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 198 மாணவர்கள் பயின்று வருவதாகவும், அவர்கள் அடுத்த ஆண்டு இந்த கல்லூரிக்கு மாற்றப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

முதல்கட்டமாக 150 படுக்கைகளுடன் கொண்ட மருத்துவமனை செயல்பட தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

>>>>>>>>>><<<<<<<<<<

கல்லணையிலிருந்து திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும் என்பதால், காவிரி கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது 20 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>>>><<<<<<<<<<

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தின் ஓரிரு இடங்களில், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைப்பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

இருவரிச் செய்திகள்

காஸாவில் 65 சதவீதமான இடம் தங்களது கட்டுப்பாட்டில் உள்ளது என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

ஐக்கிய அரபு எமிரேட்டில் சர்வதேச ஒட்டகத் திருவிழா நேற்று தொடங்கியது.

>>>>>>>>>><<<<<<<<<<

ஈரான் எண்ணெய் ஏற்றுமதி மீது அமெரிக்க புதிய தடைகளை விதித்துள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

ஜம்மு காஷ்மீரில் தோட்டக்கலை விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

>>>>>>>>>><<<<<<<<<<

கிருஷ்ணகிரியில் நேற்று நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 200 பேருக்கு பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ்குமார் வழங்கினார்.

>>>>>>>>>><<<<<<<<<<

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தின் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று திருச்செங்கோடு அருகேயுள்ள மல்லசமுத்திரத்தில் நடைபெறவுள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் குடமுழுக்குவிழா நடைபெறுவதை முன்னிட்டு, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு சரக்கு வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் இயக்க இன்று முதல் 3 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

சென்னை துறைமுகம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட ராயபுரம் மண்டலத்தில் புதிதாக தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை அமைச்சர் திரு. சேகர்பாபு நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>>>><<<<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

நடப்பு உலக சாம்பியன் இந்தியாவின் குகேஷ், ரேபிட் செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

குரேஷியாவில் நடைபெற்ற போட்டியில், 19 வயதான இந்திய வீரர் குகேஷ், 38வது காய் நகர்த்தலில் அமெரிக்காவின் வெஸ்லியை வென்றார்.

இந்த போட்டியில் பங்கேற்ற மற்ற இந்திய வீரர்களான பிரக்ஞானந்தா மற்றும் ரமேஷ்பாபு ஆகியோர் 9 புள்ளிகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்தனர்.

>>>>>>>>>><<<<<<<<<<

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 5 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

லண்டன் ஓவெல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய இங்கிலாந்து 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 166 ரன் மட்டுமே எடுத்து.

ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் 3 போட்டிகள் நிறைவடைந்த நிலையில், இந்தப் போட்டியில் தோல்வியடைந்தாலும், ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று, 2-1 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

>>>>>>>>>><<<<<<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், திண்டுக்கல் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் சேப்பாக்கம் அணியை வென்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

>>>>>>>>>>END<<<<<<<<<<